21.01.2026 பி.வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை (ஒ.எஸ்.எண். 223/2018 ) திரு.செல்வன்.

வாதி தரப்பு குறுக்கு விசாரணை–

1) வாதிகள் என்ன வழக்கு தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அவர்கள் என் உடன் பிறந்த சகோதரிகள் தான் என்றால் சரிதான். அனைவரும் இராஜாபுதுக்குடி கிராமத்தில் தான் குடியிருந்து வருகிறோம் என்றால் சரிதான். தாவாச்சொத்து ஆரம்பத்தில் எனது தாத்தா இசக்கிமுத்துக்குப் பாத்தியப்பட்ட சொத்து என்றால் 1978 ல் திருநெல்வேலி நீதிமன்றத்தில் பாகப்பிரிவினை வழக்கு நடைபெற்று 21.09.1981 ல் தீர்ப்பு பிறப்பிக்கப்பட்டுள்ளது. 21.09.1981 ம்தேதியிட்ட ஆவணத்தில் சுப்பையாவிடமிருந்து எனது தந்தை பெரியகருப்பசாமி கிரையம் பெற்றதாக ஆவணம் தாக்கல்செய்துள்ளேன் என்றால் சரிதான். அதற்கு முன்பு எனது தாத்தா இசக்கிமுத்து, சுப்பையாவுக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணம் 04.02.1981 பி.வா.சா.ஆ.2 ஆக தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 ஆவணத்திற்கு பின்னர் தான் பெரியகருப்பசாமி சுப்பையாவிடமிருந்து கிரையம் பெற்றார் என்றால் சரிதான். திருநெல்வேலி முதன்மை மாவட்ட சார்பு நீதிமன்றத்தில் அ.வ.எண்.139/1968 வழக்கின்படி தான் எனது அப்பாவுக்கு கிடைக்கப்பெற்றதாக எதிர்வழக்குரையிலும்,முதல் விசாரணை வாக்குமூலத்திலும் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். அ.வ.எண்.139/1968 வழக்கின் தீர்ப்பு, தீர்ப்பாணையை வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை கைவசம் உள்ளது. 1968 வழக்கின்படி சுயமாகப்பாத்தியப்பட்டதாக எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். 04.02.1981 ல் சுப்பையாவிடமிருந்து எனது தகப்பனார் பெரியகருப்பசாமி கிரையம் பெற்ற கிரைய ஆவணம் தாக்கல் செய்துள்ளதால் அதில் எது உண்மை என்றால் இரண்டுமே உண்மை தான். தபசில் சொத்து எனது தாத்தா இசக்கிமுத்துக்கு பாத்தியப்பட்டது என்பதால் இந்த வழக்கின் வாதிகளுக்கும் பாகம் உள்ளது என்றால் இசக்கிமுத்து விற்பனை செய்துவிட்டதால் அவருக்குசொத்து இல்லை. திருநெல்வேலி முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்ற அ.வ.எண்.139/1968 வழக்கு தபசில் சொத்திற்குரியது இல்லை என்றும் அதுவேறு சொத்திற்கு உரியது என்பதால் தான் திருநெல்வேலி நீதிமன்றத்தில் பிறப்பித்த தீர்ப்பும்,தீர்ப்பாணையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல.

2) எனது தகப்பனார் பெரியகருப்பசாமி எனக்கு எந்த தேதியில் ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்தார் என்றால் 2017 ஆம்ஆண்டு தேதி ஞாபகமில்லை. சொத்தை ஏற்பாடு ஆவணம் எழுதிக்கொடுத்த பின்பு எனது தகப்பனாரை நானும், எனது தம்பியும் அவரை சரியாக பார்த்துக்கொள்ளதால் அவர் அந்த ஏற்பாடு ஆவணத்தை ரத்து செய்யக்கோரி கோட்டாட்சியரிடம் மனுக்கொடுத்தார் என்றால் இல்லை. ஏற்பாடு ஆவணத்தை ரத்து செய்யக்கோரி கோட்டாட்சியரிடம் மனுக்கொடுத்தது உண்மை என்று சொன்னால் சரியல்ல,எனது தந்தை அவ்வாறு செய்யமாட்டார். நானும், எனது தம்பி பாலமுருகனும் எனது தந்தையை சரியான முறையில் கவனிக்காமல் 2ம்வாதி முத்துலட்சுமி தான் பராமரித்து வந்தார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து எனது தாத்தா இசக்கிமுத்துக்கு பாத்தியப்பட்டது என்றும் எனது தந்தை பெரியகருப்பசாமி தவறுதலாக எனது பெயருக்கு ஏற்பாடு எழுதிக்கொடுத்துவிட்டார் என்றால் சரியல்ல. தாவாச்சொத்து வாதிகளுக்கு 1/5 பங்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல.

<u>மறுவிசாரணை</u> – இல்லை.

*திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்ததை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது*

*(ஒப்பம்)C.கருப்பசாமி,*
*மாவட்ட உரிமையியல் நீதிபதி,*
*21.01.2026.*